# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 5/2022

DW2– பரமசிவம் நாள் 27.01.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு படிக்க தெரியாது. நான் 4ம் வகுப்பு படித்துள்ளேன். விவரங்கள் நான் தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். என் தாத்தா பெயர் பிச்சமுத்து உடையார். என் பாட்டி பெயர் பெரியம்மாள். 1960 செப்டம்பர் 20 ந் தேதி வி.களத்தூர் சர்வே எண்.98/8, 96/18, 98/9, 98/5 ஆகியவற்றில் 8 ஏக்கர் 92 சென்ட் நிலத்தை பெரியம்மாள் தனிப்பட்ட முறையில் கிரயம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. பூர்வீக சொத்து இல்லாமல் வி.களத்தூர் கிராமத்தில் சர்வே எண்.88/2ல் 5.5 ஏக்கர் என் அப்பா முத்துசாமி பெயருக்கு அரசு அடமானமாக கொடுத்தது. சுமார் 1.5 ஏக்கர் நிலத்தை சிந்தாமணி கிரயமாக 1970 ல் வாங்கினார். அதன் சர்வே எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என் அப்பா பெயருக்கு ஏற்பட்ட அடமான உத்தரவு எதுவும்தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.98/1 ல் 77 சென்ட் மட்டும் தான்கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதனுடன் வேறு சர்வே எண்ணிலும் கிரையம் வாங்கியுள்ளார். 1ம் வாதியின் கணவர் ஆறுமுகம் அடமானம் எதுவும் வைக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. ஆறுமுகம் 1 காணி இடத்தை அடமானம் வைத்துள்ளார் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆறுமுகத்திற்கு தனம், வடிவேல், செல்வராஜ், கந்தன், சக்திவேல் மற்றும் சுதா ஆகியோர் பிள்ளைகள். அதில் சக்திவேல் இறந்துவிட்டார். ஆறுமுகம் அடமானம் எதுவும் வைக்கவில்லை என்றும், ஏற்கனவே வைத்த அடமானத்தை அவர் மீட்டுவிட்டார் என்றும், மறுபடியும் அடமானம் வைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, அவர் 1996–ல் மறுபடியும் அடமானம் வைத்தார். அவர் 1996ல் அடமானம் வைக்கவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆறுமுகம் 1982ல் சர்வே எண்.98 சம்பந்தப்பட்ட சொத்துக்கள் சிலவற்றை விற்றார். ஆறுமுகம் சொத்து விற்கவில்லை என்றும் 66 சென்ட் என் பெயரில்

தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வம்சாவழிபட்டியல் சரியானது தான் என்று சொன்னால் தவறு. நானே என் வழக்கறிஞரிடம் தவறான வம்சாவழிபட்டியலைக் கொடுத்து 1960ல் என் பாட்டி வாங்கிய சொத்தில் எல்லோருக்கும் பாகம் உள்ளது என்றும் நான் மட்டும் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் பூர்வீக சொத்தில் தான் பாகம் கேட்கிறார்கள் நான் தனிப்பட்டமுறையில் வாங்கிய சொத்தில் பாகம் கேட்கவில்லை என்று சொன்னால் பூர்வீக சொத்தில் வாதிகளுக்கு பாகம் கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. என் அப்பாவுக்கு அரசாங்கம் அடமானம் கொடுக்கவில்லை என்று அவ்வாறு கொடுத்திருந்தால் நான் அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வி.களத்தூர் சர்வே எண்கள் 98 சம்பந்தப்பட்டவை அனைத்தும் ஆற்றோரமாக உள்ளது என்றால் சரிதான். எல்லா சொத்துக்களும் பக்கம்பக்கமாக தான் இருந்தது என்றும் மேட்டுப்பகுதியை சீர்திருத்தம் செய்தும் முற்களை வெட்டியும் கூட்டுகுடும்பமாக இருந்து சரிசெய்து விவசாயம் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் தான் சீர்திருத்தம் செய்தேன். பூர்வீக சொத்துக்கள் அனைத்தையும் நானும், அய்யம்பெருமாள் மட்டுமே வைத்துக்கொண்டுள்ளோம் என்று சொல்வது சரியல்ல. அவரவர்களுக்கு பிரிந்த சொத்துக்களை அவரவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். வருவாய் துறையினரின் உதவியுடன் பட்டாக்களை என் பெயரில் மாற்றி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், அய்யம்பெருமாளும் வாதிகளுக்கு சொத்து கொடுக்காமல் காவல்நிலையம் வரையிலும் பிரச்சனை சென்றது என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதிகள் பெயர்களிலும் காவல்நிலையத்தில் குற்ற வழக்கு உள்ளது. அய்யம்பெருமாள் மிலிட்ரிகாரர் என்றால் சரிதான். ஆறுமுகம் 2021ல் இறந்தார். அவர் இறந்த பிறகு தான் வாதிகள் என்னிடம் பாகம் கேட்டார்கள் என்றும், நான் பாகம் கொடுக்காததால் போலீஸ் வழக்கானது என்றுசொன்னால் சரியல்ல. ஆறுமுகம் உயிருடம்இருக்கும் போது ஆர்டிஓவிடம் மனு கொடுத்து

விசாரணைக்கு வந்தபோது விசாரணைக்கு ஒத்துழைக்காமல் நான் காலம் தாழ்த்தியதால் அவர் 2021ல் இறந்து விட்டார் என்றால் சரியல்ல. சர்வே எண்.98/1, 88/2, 98/5சி, 98/8பி ஆகிய நிலங்கள் என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். அய்யம்பெருமாள் சர்வே எண்கள் 223/14, 223/15ஏ1, 223/15ஏ2, 223/15ஏ3, 338/1ஏ2பி ஆகிய நிலங்களை அனுபவிக்கிறார்கள் என்றால் சர்வே எண் தெரியவில்லை. மொத்தம் 19 ஏக்கர் 36 சென்ட் நிலம் உள்ளது என்றும், அதை நான் சமமாக பிரித்து வாதிகளுக்கு கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. சமமாக பிரித்து கேட்ட போது தான் நானும் அய்யம்பெருமாளும் சேர்ந்து வாதிகளை தாக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. ஆறுமுகம் 30 செண்ட்டை விற்றதாக தான் நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றும், மற்ற சொத்துக்களை அவர் விற்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மீதி நிலங்கள் எல்லாம் வாதிகளின் அனுபவத்தில் இருப்பதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிர்வழக்குரையில் வாய்க்காரராக பாகம் பிரித்துக்கொண்டோம் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. பாகம் கேட்கிறார்கள் என்று தான் நான் கூட்டுக்குடும்ப சொத்தை என் மனைவி பெயருக்கும், அய்யம் பெருமாள் அவரது மகன் பெயரிலும் தானசெட்டில்மெண்ட் எழுதினார்கள் என்றால் சரியல்ல. எனவே வாதிகளுக்கு தாவா சொத்தில் 1/3 பாகம் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பூர்வீக வீடு இல்லை. புறம்போக்கு இடத்தில் தான் வீடுகட்டியுள்ளேன். அய்யம்பெருமாளுக்கு வீடு உள்ளதை பற்றி அவரை தான் கேட்க வேண்டும். நானும் அய்யம்பெருமாளும் சேர்ந்து வாதிகளின் பாகத்தை ஏமாற்றுகிறோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.